சுருக்கம்

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை – தமிழ்நாடு மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியத்தினை திருத்தியமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜி2)துறை

அரசாணை (டி) எண்: 716

நாள் 27.12.2018

விளம்பி – மார்கழி 12
திருவள்ளுவர் ஆண்டு 2049

000844
- 9 ஜன 2019

படிக்கப்பட்டவை:

1 அரசாணை (டி) எண். 321, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜி.2) துறை, நாள். 19.07.2012.

2 அரசாணை (டி) எண். 140, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜி.2) துறை, நாள் 01.03.2016.

3 தொழிலாளர் ஆணையர் அவர்களின் கடித எண் டி3/20956/2015, நாள். 28.03.2017 மற்றும் 09.11.2018.

---

ஆணை:

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து தொழிலாளர்களுக்கு, 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறு சட்டத்தின் கீழ் ஏற்படக்கூடிய தொழில் தகராறுகள் மற்றும் பிற தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து ஆலோசனை வழங்குவதற்காக மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம் அரசாணை (நிலை) எண்.4981, மேம்பாட்டுத் துறை, நாள் 6–10–1948ல் அமைக்கப்பட்டது. தேசிய அளவில், இந்திய தொழிலாளர் கூட்டமைப்பு மற்றும் நிலையான தொழிலாளர் குழு ஆகியவை செயல்படுகின்றன. இவற்றிற்கு துணை அங்கமாக மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம் செயல்படும்.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியமானது மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், அரசு தரப்பு பிரதிநிதிகளாக ஐந்து பேர், வேலையளிப்போர் பிரதிநிதிகளாக ஆறு பேர், தொழிலாளர் பிரதிநிதிகளாக ஆறு பேர் மற்றும் நான்கு சட்டமன்ற உறுப்பினர்களையும் (அதில் ஒருவர் பெண் உறுப்பினர்) மூன்றாண்டு காலத்திற்கு செயல்படும் வகையில் திருத்தியமைக்கப்பட்டது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேலே பார்வை இரண்டில் காணும் குழுவின் மூன்றாண்டு பதவிக் காலம் 18.07.2015 அன்று காலாவதியாகிவிட்ட நிலையில், அக்குழுவின் காலத்தை மேலும் ஓராண்டிற்கு (அதாவது 19.07.2015 முதல் 18.07.2016 வரை) நீட்டிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டது.

/ தபிபா. /

Scanned by CamScanner

4. தொழிலாளர் ஆணையர் மேலே 3-ல் படிக்கப்பட்ட கடிதங்களில், மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியத்தை திருத்தி அமைக்க கருத்துருவை அரசுக்கு அனுப்பியிருந்தார். தொழிலாளர் ஆணையரின் பரிந்துரைகளை அரசு கவனமாக ஆராய்ந்து, இவ்வாணை மூலம் திருத்தியமைக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு கீழ்க்கண்டவாறு தமிழ்நாடு மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியத்தை திருத்தி அமைத்து ஆணை வெளியிடுகிறது.

தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்

அ) அரசு சார் உறுப்பினர் (Official Representatives):

1 அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

2. தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம்

3. இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

4. தொழிலாளர் ஆணையர் – உறுப்பினர் செயலர்

5. தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் (தற்போது தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர்)

ஆ) வேலையளிப்போர் பிரதிநிதிகள் (Representatives of Employers):

1. திரு. C. பாலசுப்ரமணியன்
Indian Chamber of Commerce and Industry, Coimbatore,
No.76, 8வது தெரு, காந்திபுரம், கோயம்புத்தூர்–641 012.

2. திருமதி. C. கவிதா,
Assistant General Manager,
Carborundum Universal Limited,
'Dare House', 234, N.S.C. போஸ் சாலை,
சென்னை–600 001.

3. திரு.மகேந்திர ராமதாஸ்
Ex.President of Indian Chamber of Commerce,
Ex.Chairman of Confederation of Indian Industry, Coimbatore Zone,
Mahendra Pumps Pvt. Limited,
Puliakulam, Coimbatore – 641 045.

4. திரு.P. நடராஜன்,
தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம்,
(Southern India Mills Association) (SIMA)
தபால் பெட்டி எண்.3753, ரேஸ் கோர்ஸ் சாலை,
கோயம்புத்தூர் – 641 018.

.....3/-

Scanned by CamScanner

Scanned by CamScanner

5. திரு.K. சாய் சத்திய குமார்,
அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம்,
Ambattur Estate Manufactures Association,
1, முதல் மெயின் ரோடு, அம்பத்தூர், சென்னை–600 058.

6. திரு.கோ.சுபைர் அகமது,
M/S. பரிதா கிளாசிக் ஷூபி. லிட்,
ஆம்பூர், வேலூர் மாவட்டம்,

இ) <u>தொழிலாளர்களின் பிரதிநிதிகள் (Representatives of Employees):</u>

| | |
|---|---|
| 1. | அண்ணா தொழிற்சங்க பேரவை,<br>(Anna Thozhir Sanga Peravai) (ATP)<br>275, அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை,<br>சென்னை–600 014. |
| 2. ✓ | இந்திய தொழிற்சங்கங்களின் மத்திய அமைப்பு,<br>(Center of India Trade Unions) (CITU)<br>13, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை–600 005. |
| 3. | அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ்,<br>(Tamil Nadu All India Trade Union Congress) (AITUC)<br>குருவப்ப முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை,<br>சென்னை–600 002. |
| 4. | என்.எல்.சி. அண்ணா தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் சங்கம்,<br>டி3, டயமண்ட் ரோடு,<br>பிளாக்–17, நெய்வேலி – 1. |
| 5. | இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ்,<br>Indian National Trade Union Congress (INTUC)<br>45, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை–600 014. |
| 6. | பாரதிய மஸ்தூர் சங்கம்,<br>(Barathiya Mazdoor Sabha) (BMS)<br>கேசவ நிவாஸ், எண். 2, ரெங்கசாமி தெரு, பெரம்பூர்,<br>சென்னை – 600 012. |

ஈ) <u>சட்டமன்ற உறுப்பினர்கள் – நால்வர்:</u>

1. திரு. அம்மன் K அர்ச்சுணன்
சட்ட மன்ற உறுப்பினர்,
கோயம்புத்தூர் (தெற்கு) சட்ட மன்றத் தொகுதி

.....4/–

Scanned by CamScanner

2. திரு.K.P.P. பாஸ்கர்
சட்ட மன்ற உறுப்பினர்,
நாமக்கல் சட்ட மன்றத் தொகுதி

3. திரு.K.S. விஜயகுமார்
சட்ட மன்ற உறுப்பினர்,
கும்மிடிப்பூண்டி சட்ட மன்றத் தொகுதி

<u>பெண் உறுப்பினர்</u>

திருமதி. மு. சந்திரபிரபா
சட்ட மன்ற உறுப்பினர்,
ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி) சட்டமன்றத் தொகுதி

மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம் ஆண்டிற்கு நான்கு கூட்டங்கள், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி தொழிலாளர் நலன் குறித்து விவாதிக்கும்.

5. தொழிலாளர் ஆணையர் – உறுப்பினர் செயலர், கூட்ட நிகழ்ச்சி நிரலினை இவ்வாலோசனை வாரியத்தின் அரசு தரப்பு பிரதிநிதிகள், நிர்வாகத் தரப்பு பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், சட்டமன்றப் பிரதிநிதிகள் ஆகியோரை கலந்தாலோசித்து கூட்ட பொருளினை தயாரிப்பார்.

6. மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியக் கூட்டங்களில் அவ்வப்போது வைக்கப்படும் பொருட்களுக்குத் தகுந்தவாறு தொடர்புடைய தலைவர்களை "சிறப்பு அழைப்பாளர்களாக" கலந்து கொள்ளுமாறு செய்யலாம்.

7. மேற்கண்ட வாரியமானது இவ்வாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு நீடிக்கும்.

8. மேற்கண்ட வாரியத்தில் நியமிக்கப்படும் உறுப்பினர்களுக்காக வாரியக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன:

1. வாரியக் கூட்டத்தில் கலந்து கொள்ள பிரதிநிதியின் மாற்று நபர் அல்லது நியமனதாரர் பிரதிநிதியிடமிருந்து பெறப்பட்ட அதிகார கடிதத்துடன் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் அளித்தால் அவரை அனுமதிக்கலாம்.

2. மாற்று நபர் அல்லது நியமனதாரர் சம்மந்தப்பட்ட அமைப்பின் நிர்வாகியாகவோ அல்லது நிர்வாகக் குழு உறுப்பினராகவோ இருக்க வேண்டும்.

3. பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் குறைந்தபட்சம் மூன்று கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும் என்பதால், மேற்படி அதிகாரம் வழங்கும் கடிதங்கள் தொடர்ச்சியாக இரு முறைக்கு மேல் அளிக்கக் கூடாது.

.....5/–

Scanned by CamScanner

9. மேற்கண்ட வாரியமானது, முதல் வகுப்புக் குழுவாக கருதப்படும். இக்குழுவின் அரசு தரப்பு பிரதிநிதிகள் அல்லாதவர்கள், பயணப்படி மற்றும் தினப்படியை பெறத் தகுதியுடைவராவார்கள்.

10. இச்செலவானது கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:–

> "2230 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு 01 தொழிலாளர்–001 இயக்கம் மற்றும் நிர்வாகம் 1 திட்டமிடா்தது – ஏஏ தலைமையிடப் பணியாளர்கள் தொழிலாளர் ஆணையர் – 04 பயணச் செலவுகள்"

11. மேற்கண்ட வாரியத்தின் அலுவலகத் தரப்பு அற்ற பிரதிநிதிகளின் பயணப்படி செலவினத்தை கண்காணிக்கும் அலுவலராக தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தின் நிர்வாக அலுவலர் (குறைந்த பட்ச ஊதியம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

12. அரசாணை (நிலை) எண் 1177, நிதி (படி1), நாள் 19.7.93–ன்படி, இவ்வரசாணையானது நிதித்துறையின் ஒத்திசைவைப் பெறத் தேவையில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனில் பாலிவால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழிலாளர் ஆணையர், சென்னை–6 (25 படிகள்) (தனி நபர் மூலம்)
செயலாளர், தொழிலாளர்அமைச்சகம், இந்தியஅரசு, புதுடெல்லி 110 001.
அனைத்து வாரிய உறுப்பினர்கள்.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–35.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.

நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் தனிச்செயலர், சென்னை–9.
நிதித்துறை / கைத்தறி, கைத்திறன், துணிநூல் (ம) கதர்துறை, சென்னை–9.
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர், சென்னை–32.
மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்கள்.
சுத்த நகல் கோப்பிற்கு (கோ.எண்.6310/ஜி2/2017)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/12/18
பிரிவு அலுவலர்

Scanned by CamScanner